உதயதாரகை—MORNING STAR.

Published on the 2d and 4th Thursday of every Month at one shilling a Quarter payable in advance

சுப். புத். சந்திகை ௰௯.] ௲௮௱௪௰௬ ௵ ஐப்பசி ௴ ௨௨. தேதி வியாழக்கிழமை Thursday, October 22, 1846. [Vol. VI. No. 19.

TERMS OF THE PAPER.

To *single* subscribers, *one shilling* a quarter.

To single subscribers by *mail* (including postage)—*one shilling six pence* a quarter.

To Agents, who subscribe for *ten copies* and upwards less than twenty, *nine pence* each, a quarter.

To Agents who receive the same by *mail* (including postage) *one shilling three pence* a quarter.

To Agents for *twenty copies* and upwards, *six pence* each a quarter.

To Agents for the same by *mail* (including postage) *one shilling* a quarter.

For convenience of payment in places where no *Agent* is appointed, individuals uniting in companies of *seven*, may each receive the paper by post, for *one year*, on their remitting in advance a £2 note.

ADVERTISEMENTS will be inserted at the rate of *one penny and a half* a line for the first insertion, reckoning the type at *Brevier* size, or seven and a half lines to an inch.

Notices of *Deaths* and *Marriages* exceeding in length *five lines*, will be chargeable as Advertisements.

CORRESPONDENTS should address their communications to THE EDITOR OF THE MORNING STAR, JAFFNA.

Communications must be *post paid* to receive attention.

AGENTS OF THE PAPER.

JAFFNA—THE MISSIONARIES.
CHUNDICOOLY—Mr. W. SANTIAGOPILLY.
POINT PEDRO—Rev. J. PHILLIPS.
MANIPY—Mr. J. EVARTS.
BATTICOTTA—Mr. W. VOLK.
NEGOMBO—Mr. C. PERERA.
KANDY—Rev. C. C. DAWSON.
TRINCOMALIE—Rev. J. GILLINGS.
BATTICALOE—Rev. R. STOTT.
MOOLLITEVOE—Mr. P. TITCOMB.
MADURA—Rev. H. CHERRY.
DINDIGUL—Rev. J. J. LAWRENCE.
NEGAPATAM—Rev. P BATCHELOR.
TRANQUEBAR—Mr. G. W. COE.
MADRAS—P. R. HUNT, Esq.

வங்காளதேசத்திருந்த,ம.ா.ா.பிரசமகாதேவர்செய்த தத்தியப்பிரகாசம்.

ஐந்தாம் பிரிவு.

நீங்கள் அவிவேகிகளாய்ப் பலவிதத்தாலுந் துக்கம் அனுபவிப்பதைப் பார்க்கப் பார்க்க, நமக்கு இரக்கமாய் இருக்கின்றதே! வேண்டிய அறுசுவைப் பதார்த்தங்கள் இருக்க, உபவாசமாய் இருந்தால் கடவுள் அருள் செய்வார் அருள் செய்வார் அருள் செய்வார் என்று சொல்லிச் சொல்லி அவைகளைப் புசியாமல், வீணிலே பசிகிடந்து வருந்துகிறீர்கள். உங்களுக்குபயோகமான பலவித கருமங்களைச் செய்ய உங்களுக்குச் சமயமிருந்தாலும், இன்ன வாரத்திலே இன்ன முகூர்த்தத்திலே இன்ன காரியம் செய்தால் அது சித்தியாகாதென்றும், அது சாஸ்திர விரோதமென்றும், எண்ணி எண்ணி உங்கள் நயங்களையிழந்து போகிறீர்கள். தருமத்தைப் பெறுதற்கு யோக்கியாகிய தரித்திருக்குத் தருமஞ் செய்யாமல், ஆணவமும் வஞ்சகமுமே நிறைந்துள்ள செல்வர்களுக்குத் தருமஞ் செய்கிறீர்கள். சுகந்த புஷ்பாதிகளைக் கந்தஞானமாத்திரையுள்ளவர்களுக்குக் கொடாமல், அது இல்லாத விக்கிரகங்களுக்குக் கொடுக்கிறீர்கள். சிலவேளை தாம்பிர பாத்திரத்தில் வைக்கிறீர்கள். சிலவேளை வீணாக நதியிலே எறிந்து விடுகிறீர்கள். சீதளகாலத்திலே தண்ணிரில் ஸ்நானம் பண்ணியும், உஷ்டண காலத்திலே பஞ்சாக்கினி மத்தியில் இருந்து தவஞ்செய்தும், வருத்தந் தேடிக்கொள்ளுகிறீர்கள். உங்கள்மனோ கற்பனையினாலே தோன்றிய பூதங்களுக்கும் பேய்களுக்கும் அல்லும் பகலும் பயந்து பயந்து நடுங்குகிறீர்கள். கடவுளானவர் சிற்சில முக்கிய ஸ்தலங்களில் மாத்திரம் வீற்றிருக்கிறார் என்றெண்ணி, அவ்விடங்களுக்கு யாத்திரைபண்ணி, வெகுகிலேசங்களை யனுபவிக்கிறீர்கள். இவ்வியாத்திரைகளிலே வெகு பேரிறந்து போகிறார்கள். சமீபத்திலே உத்தம சலமிருந்தாலும், சேறும் மலசலாதிகளுங் கலந்த சலத்திலே ஸ்நானம்பண்ணுகிறீர்கள்: அதையே குடித்தும் வருகிறீர்கள். உங்களுக்குள்ளே ஒருத்தனே பல பல ஸ்திரீகளை விவாகம்பண்ணி, அவர்களைத் துக்கத்திலமிழ்ந்தும்படிசெய்து, துன்னெறிக்கேதுவாக்கித், தானும் அதினாலே மனஸ்தாபத்தை அடைவான். ஒரு கெட்ட குதிரையைத்தானும் வாங்க முடியாத இருபது முப்பது ருபாய்க்கு, ஓர் சிலையை

ON HINDU IDOLATRY, &c.

SECTION V.

Yet we do truly pity you, because we see how much wretchedness you suffer and how senselessly you act, in various ways. Thus, though possessed of every article of food, you fast and are hungry, saying God will be pleased if you eat not! Having time to employ in useful occupation, you yet desist from every kind of labour, under the tormenting notion that certain seasons and hours are unlucky, and that to work at such times is both unlawful and of evil consequence, and so you pass them in inactivity! Instead of bestowing your alms on poor men, who are at the same time worthy objects of charity, you heap them upon certain proud and wealthy impostors! You give not your sweet-scented flowers and other odorous matters, to those possessed of the power of smell, but throw them sometimes into a copper dish, sometimes into the river, and at other times place them before images void of sensation, and thus waste them to no purpose whatever! In the winter season you give yourselves gratuitous pain by bathing in cold water; in the warm weather you torment yourselves by sitting between great fires of your own kindling! Day and night you distress yourselves with imaginary fears of ghosts and witches, and the like; and erroneously supposing that God is in one place and not in another, you submit to much trouble, inconvenience and loss, in travelling to various regions as pilgrims, many even dying in consequence! Again, though you have excellent water at hand, you prefer to use, both for drinking and bathing, that which is at once muddy and fouled with many nauseous substances, and brackish withal. Frequently, one man marries a great number of wives, only to render them miserable, force them into vice, and brand them with infamy, while he himself is involved in much vexation and trouble on their account. You purchase for twenty or thirty rupees, less than the price of a common hack poney, a block of stone or a lump of clay and call it your god! Men inflated with pride, (than which no vice is more contemptible,) full of craft and falsehood, vain and boastful, you recognize as your spiritual advisers! Instead of causing your sons to be instructed in the Surya Siddhanta and other astronomical treatises,—in which it is clearly shewn that the earth is a round body and revolves in empty space, and that eclipses of the moon are caused by the intervention of the earth's shadow; the rain and dew are produced by the sun's heat, raising up watery vapour from the surface of the earth, which afterwards descends in drops and showers upon it; with many similar physical facts—you have them taught to repeat like parrots, without understanding them, stories from the Purans and other Shastras, in which the supposed object is to convey religious and moral lessons clothed in the guise of fabulous narration. Thus, for instance, you teach them that the earth is a triangular plain resting on the back of a tortoise; that when an eclipse occurs, it is Rahu a great demon; enemy of the sun and moon, that swallows them up! that the clouds are celestial personages, male and female, that pour down rain upon us! and when the concussion of those clouds occasions thunder; you tell them that it is the gods uttering their voices! and so on. If a person happen to sneeze, or the chirp of a lizard is heard, you say that at such a time to apply to any business or enter on any undertaking would be followed by some misfortune; these and a thousand other equally absurd and senseless things we see you crediting or practicing yourselves and teaching to others, and of course we are afflicted at beholding people were the forms of men, yet thinking and acting so like creatures without intelligence.

Again, another cause which occasions disunion and alienation between you and us is this, that what you regard as the most binding of religious duties, or the most solemn worship of the objects you adore, we esteem to be positive acts of religion. Thus, to particularize, you conceive earth, stone, trees, beasts, birds and many things else to be God; we have no such belief: you consider sundry distortions of your fingers, feet and other members, with dances and sports, the wearing of certain pieces of wood suspended from your necks, and daubs or spots of sandal powder and coloured earth upon your foreheads, with various similar practices, as things productive of religious merit, but we see no such value in them: you say that it is meritorious to drink the water, or wear on your bodies the dust and mud of certain places but we have no such opinions: some among you eat, even in unclean places and with impure hands food brought from particular spots, esteeming it both pure and a means of acquiring religious merit, which we can by no means allow; moreover, some sects among you look upon the use of intoxicating substances, the destruction of animal life, and feasts of blood, as acts of spiritual worship of the Supreme, which we cannot at all regard as such: other sects, again, regard the eating of the impurities ejected from the bodies of men, or cows, as productive of religious merit, a practice in which we can see nothing at all of a religious character. Moreover, you burn widowed women alive in the fire of the funeral pile; yea and put even your aged mothers and fathers to death by immersing them in water, or by scraping and rubbing them with stones, bricks, and the like; acts which you deem meritorious, but which we call murder; the gathering together of large crowds of people also, and the bestowment of large gifts and alms upon them, you term an act of merit; but we cannot so regard it: you call the sounding conch-shells and ringing of bells, dancing and snapping of the fingers, and the like, meritorious practices; but we look upon them in no such light: to fast yourselves, at certain reasons, and to keep others fasting,

யாயினும் மிர்த்திகாபிண்டத்தையாயினும், வாங்கி அதைத் தேவனென்று வணங்குகிறீர்கள். சகல பாவங்களினுங் கொடிய ஆணவமும் பொய்யும் புழுகும் வஞ்சகமும் நிறைந்த வீணர்களையே உங்கள் குருக்கள்மாரென்று அவர்களைப் பின்பற்றுகிறீர்கள். பூமியானது அந்தரத்திலே தன்னைத்தான் சுற்றுகின்ற உண்டை வடிவாயுள்ள ஓர் வஸ்துவென்றும், சந்திரபிம்பம் சூரியனை மறைத்தலினாலே சூரிய கிரகணமும் பூமியின் நிழல் சந்திரனை மறைத்தலினாலே சந்திரகிரகணமும் உண்டாகின்றனவென்றும், சூரியனுடைய உஷ்டணகிரணத்தினாலே பூமியிலுள்ள நீரணுக்கள் திரண்டு மேலே சென்று, திரும்ப வருஷ கிரணத்தினாலே மழையாகவும், இம கிரணத்தினாலே பனியாகவும் பெய்யுமென்றும், தெரிவிக்கின்ற சூரியசித்தாந்த முதலிய கணிதசித்தாந்தங்களையுமுங்கள் பிள்ளைகளுக்குப் படிப்பியாமற் புராணாதிகளைப் படிப்பிக்கிறீர்கள். மேற்கூறியவைகள் அனைத்தையும், அப்புராணாதிகளிலே பூமியானது கூர்மத்தின்மேலே பாப்பாயிருக்கின்ற திரிகோண பிண்டமென்றும், சூரிய சந்திரர்களை அவர்களுக்குச் சத்துருவாகிய இராகு பிடித்து விழுங்குவதினாலே சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாகின்றனவென்றும், மேகங்கள் நமக்கு மழைபெய்கின்ற ஸ்திரிபுருஷர்களாகிய தேவதைகளென்றும், மேகங்கள் ஒன்றோடொன்று உராஞ்சுதலினால் வரும் முழக்கத்தைத் தேவர்களுடைய சத்தமென்றும்,உருவகப்படுத்திப் பேசியிருக்கின்றதினால்; இவைகளைக் கற்பவர்கள், தங்களுக்கு அவற்றின் பொருள் விளங்காமையாற் சொன்னத்தைச் சொல்லுங் கிளிகள் போலிருக்கிறார்கள். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கும்பொழுது ஒருத்தர் தும்மினாலும், ஒரு பல்லி சத்தமிட்டாலும், சித்தியாகாதென்கிறீர்கள். இப்படிப்பட்ட வீண் காரியங்கள் அனேகாயிரம் உங்களிடத்திலே காண்கிறோம். அறிவினையுடைய மானிட தேகத்தையுள்ள சனங்கள் அறிவில்லாத மிருகசெந்துக்களைப் போல இப்படிச் செய்துவருவதைப் பார்க்கப் பார்க்கப், பரிதாபமாயிருக்கின்றதே!

நீங்கள் பிரதானமான கடமையென்று சொல்லிச் சொல்லிச் செய்து வரும் தேவாராதனைகளை நாம் பாவமென்று சாதித்து வருதலினாலும், உங்களுக்கும் எங்களுக்கும் வேற்றுமையுண்டாயிருக்கின்றது.—நீங்கள் மண்,கல்,மரம்,மிருகம், பட்சி, முதலியவைகளைத் தெய்வமென்று வணங்குகிறீர்கள். நாங்களோ அப்படி வணங்குவதில்லை. கை நொடித்தல் காலடித்தல் முதலிய அங்க கோணிகளும், நடன அபிநயங்களும், காவடியெடுத்தலும், நெற்றியிலே நாமந் தரித்தலும், சந்தனப் பொட்டிடுதலும், பிறவும் புண்ணிய கர்மங்களென்றெண்ணுகிறீர்கள். நாங்களோ அப்படியெண்ணவில்லை. நீங்கள் சில முக்கிய தீர்த்தங்களைப் பானம்பண்ணுவதும், சில முக்கிய ஸ்தலங்களிலுள்ள பூதுளியைச் சரீரத்திற்றரிப்பதும்,புண்ணியமென்று சொல்லுகிறீர்கள். நாங்களோ அப்படி நினைப்பதுமில்லை. உங்களுக்குள்ளே அநேகர் கோவிற் பிரசாதம் சுத்தமுள்ளதென்றும், புண்ணியந்தருவதென்றும் எண்ணி, அசுத்த ஸ்தலங்களிலிருந்துகொண்டு, கைகழுவாமலும் சாப்பிட்டுவிடுகிறார்கள். நாங்களோ ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டோம். உங்களிற் சில சமயிகள் மதுபானமும் மாமிசபட்சணமும் இரத்த பானமும் மோட்சசாதனமென்று சொல்லி, நடப்பித்து வருகிறார்கள். நாங்களோ அப்படியில்லை. வேறு சில சமயிகள் கோசலகோமயமுதலியவைகளைப் புண்ணியமென்று, உட்கொண்டு வருகிறார்கள். நாங்களோ அதினால் அற்ப புண்ணியமாயினும் உண்டென்று எண்ணவில்லை. இன்னும், நீங்கள் விதவைகளை அவ்வவர் புருஷர்களோடும் தகனம்பண்ணுகிறீர்கள். வயோதிகராகிய மாதுரு பிதிர்கணர்களைச்சலத்திலேதள்ளியும், கல்லுக்களாலே உராஞ்சியும், கொன்றுபோடுகிறீர்கள். இப்படிச் செய்தால், அவர்களுக்கு மறுமையிற் பிரயோசனமுண்டென்கிறீர்கள். நாங்களோ இது கொலைபாதகமென்றே நிச்சயிக்கிறோம். வெகு சனங்களைத் திரளாய்க் கூடிவரும்படி செய்து, அவர்களுக்குப் பிச்சைகொடுப்பது புண்ணியமென்கிறீர்கள். நாங்களோ அப்படி நினைக்கமாட்டோம். சங்கோசையும், மணிச்சத்தமும்,நடனபிநயங்களும்,கைநொடித்தலும், கன்னத்தடித்தலும், புண்ணியமென்று பேசுகிறீர்கள். நாங்களோ அதில் ஒரு நயத்தையுங் காணவில்லை. நீங்கள் சில தினங்களில் உபவாசமாயிருப்பதும், பிறரை அவ்வாறு இருக்கும்படி செய்வதும், புண்ணியமென்கிறீர்கள். நாங்களோ அதைச் சற்றயினும் அ

ங்கீகரிக்கமாட்டோம். சில தேவாராதனைகளிலே நானாவிதவியபிசாரங்களைப் புண்ணியமென்றுகைக் கொள்ளுகிறீர்கள். நாங்களோ அது பாதகமென்கிறேம். இப்படி உங்களுக்கும் எங்களுக்குமுண்டான வேற்றுமை இவ்வளவென்று, சொல்லமுடியாது.

இப்படிஎல்லாருமிருப்பதினுலே; உலகமெங்கும்வியாபித்து நின்று அதன்கணுள்ள அவ்வவ வான்மாக்களது மனுதிக வாக்கிக காயிகங்களை அறியும் சீவசாட்சியாகிய பராப்பிரமத்தையே விசுவாசித்து, அப்பராப்பிரமமருளிய விதிப்பிரகாரம் உங்களுக்கும் பிறருக்குமாத்மலாபங் கிடைக்கும் பொருட்டு, நன்னெறியில் நடந்து வாருங்கள். நீங்கள் இவ்வுபதேசத்தைக் கைக்கொண்டு அதின்படி நடவாமல்; எங்கள் மேற்கோபித்து, எங்களை வைதீர்களாகில், அதுஉங்களுக்கேயன்றி எங்களுக்குத் தீமையாய் முடியமாட்டாது. மண்ணினுலும் மரத்தினுலும் தாம்பிரத்தினுலுஞ் செய்யப்பட்ட விக்கிரகங்களையுமன்றி, குரங்கு கரடி பருந்து நரி முதலிய விலங்குகளையும் தெய்வமென்று கருதி வணங்கும் அவிவேகிகள் சொல்லும் நிந்தனைகள் என்னபெறும்! எப்படியிருந்தாலும், நாங்களோ உங்களுக்குத் தயை செய்யும்படி விரும்புவதேயன்றி, உங்கள் மேற் பொறமைகொள்ளமாட்டோமே. ஆதலால், எங்கள் சொற்களைக் கேட்டு, விக்கிரகாராதனையாகிய சிறு பிள்ளை விளையாட்டைத்தள்ளி விட்டு, ஏகபராப்பிரமத்தையேசிந்தித்துவணங்கிவாருங்கள்.

தத்தியப்பிரகாசம்

சமாப்திபெற்றது.

லூத்தரின் சரித்திரத் தொடர்ச்சி.

௰௯ம். அத்தியாயம்.

டாக்குத்தர் எக், காள்ஸ்டாற், லூத்தர் என்பவர்களுக்குப் பாப்புவின் தலைமையைப் பற்றி உண்டான தருக்கம்—அத்தாலாய பயன்.

பாப்புவுக்கநுசாரிகள் தொடர்ந்தவியாச்சியங்களைக்கேட்கிறதவசாமற்றிருந்தது. தெற்சலென்பவன் என்செய்வேனென்று விழிபிதுங்கிக்கொண்டிருந்தான். திரும்பத்திரும்ப வாதம்பண்ணுவதாலாவதென்னவென்று லூத்தரின்சினேகிதர்கள் அவரைப்பார்த்து விட்டுவிடுமென்றுமன்றாட அவரும் விட்டுவிடுவேனென்று வாக்குழலம்பண்ணிக்கொடுத்தார்.

டாக்குத்தர் எக் என்பவர் முன்னொருமுறை தான் சமஸ்த கலைக்ஞானக்கல்லூரிகளேட்டிலுந் தானடைந்துகொண்ட வேதமதியினிமித்தம் தன்னைவிடக்கெட்டிக்காரனொருவனுண்டோவென்று அகங்காரங்கொண்டு, லூத்தருடன்வாதுபண்ணி அவரைவென்று தன்சாமர்த்திய சம்பிரதாயங்களைக்காட்டும்படி முயன்று திரும்பவும் வாதுதொடுக்கவாரம்பிக்குஞ்சமயமெப்போவருமென்று காத்திருக்கச் சமயமுஞ்சீக்கிரம்நேரிட்டது.

காள்ஸ்டாற் என்பவர் ஏக் என்பவர் செய்த பிரபந்தத்திற்குவிரோதமாகத்தானுஞ் சிலபல பிரபந்தங்களையுண்டுபண்ணி அவைகளின்மூலமாய்லூத்தர்கொண்டகோட்பாடுகளே உத்தமமென்றேர்த்துக்கொண்டார். இதற்கு எக் என்பவர் பண்ணினமறுமொழிக்குக் காள்ஸ்டாற் என்பவர் திரும்பவும் பிரதிமொழிகளைப் பண்ணினர். வரவர வாது அதிகந்தாக்கங்கொண்டதாயிற்று. ஆகையால் இனிவாதாடுமிடம்லீப்சிக் என்று தீர்மானம்பண்ணப்பட்டது. ஆனாலும் எக் என்பவர் தான் காள்ஸ்டாற் என்பவரை வென்றுவிடக்கூடுமென்றெண்ணி இப்படிப்பட்டவற்பனோடே வாதாடுவதோரு அற்பன்காரியமென்றுத்தேசித்து லூத்தரையேதுவிதமுங் கீழ்ப்படுத்துவதே அவருடைய முழு அபிப்பிராயமாயிருந்ததால், லூத்தரை வாதகளத்திலழைக்கவும் அவர்சமயானுசீர்த்தேற்றத்தைப்பற்றிப்பண்ணிய பதின்மூன்று பிரதான போதனைகளைக் கண்டிக்கவும் வகைதேடினர். அந்தப்பதின்மூன்று போதனைகளின் பொழிப்புரைகளாவன—"சில்வேத்தீரியென்னும் பாப்பு இருந்தகாலத்திற்குமுன்னமே ரோமசபையானது மற்றுஞ்சபைகளுக்குச்சிரேஷ்டமல்லவென்றும் அவரோ எக்காலத்திலும் சம்பேதுருவின்பட்டத்திற்குப் பின்னதிகாரியும் யேசுக்கிறீஸ்துவின் பிரதிகாவலனுய்ச் சிங்காசனத்திற்கொலுவிருந்து சம்பேதுருவின் விசுவாசமென்னுஞ் செங்கோலைப் பிடித்திருக்கிறவரொன்றும் நாம் ஒப்புக்கொள்ளுகிறேம்"— என்றார்.

எக் என்பவர் மகா உக்கிரமாய்ப் பேசின பேச்சுக்கள் எல்லாவற்றையும் லூதர் கேட்டு யாதொன்றும் பேசாமல் மனவமைதியாய் இருந்தும், அவருடைய பிரபந்தங்கள் எல்லாவற்றையும் அஞ்சா நெஞ்சத்துடன் அத்தாட்சிப் பிரகாரமாய்க் கண்டனம்பண்ணினர். அக்கண்டனதண்டனத்தின்முடிவுரையாதெனில—"இற்றைக்குச்சற்றே நான்கு சதகத்திற்கு முன்பின்னுக உண்டாக்கப்பட்ட அற்பசிந்தையுள்ள

this also you deem religion, which we cannot at all admit: nay, in the worship of certain deities, you consider acts of promiscuous intercourse between the sexes to be meritorious! we call them by a very different epithet: how should there, then, be harmony and cordiality betwixt us?

And now, finally, I exhort you to believe the Supreme God to be the everywhere present, the Universal witness, cognizant of every act and word and thought of every one of you; and agreebly to his fixed appointment, to labour for your own welfare and that of other men, and so secure your ultimate salvation. If, instead of profiting by our instructions and exhortations, you should only hate, caluminate and abuse us, we shall regard your so doing as a thing of no moment whatever, as it affects ourselves; for we cannot be materially either advantaged or injured by the assertions of men so miserably degraded and void of understanding as to look-upon images of earth, wood and metal as God, and to hold monkeys, bears, kites, jackals and other animals to be objects of religious veneration! No—you would rather, be objects of compassion to us, than of anger and dislike, by so doing: so once more, I say, abandon the childish amusements of idol-worship and believe in and adore the one Supreme God alone.

THE END.

A few Chapters from the Life of Luther.

CHAPTER XIX.

Dispute between Dr. Eck, and Carlstadt, and Luther on the Primacy of the Pope—Results of the discussion.

The Pope's partisans were no longer heard.—Tetzel was incapable of any movement. The friends of Luther entreated him to give over further contest, and he had promised to do so.

Dr. Eck, author of the "Obelisks," was the first to re-commence the combat. Eck, full of confidence in himself and proud of the prizes he had won in eight universities, ardently desired an opportunity of displaying his ability and address in a dispute with Luther. That opportunity soon occurred.

Carlstadt had published against Eck's "obelisks" some theses wherein he espoused the opinions of Luther and their common faith. Eck had replied, and Carlstadt had replied again. The discussion grew warm. Eck, desiring to profit by the opportunity, had challenged the impetuous Carlstadt. It was settled that Leipsic should be the scene of the discussion.

But Eck thought it a small thing to contest the question with Carlstadt. It was his object to humble Luther. He therefore sought to tempt him into the field, and put forth thirteen theses, bearing directly on the principal doctrines of the Reformer. The thirteenth was in these words,—"We deny that the authority of the Roman church did not rise above that of other Churches before the time of Pope Sylvester, and we acknowledge in every age as successor of St. Peter and Vicar of Jesus Christ, him who was seated in the chair and held the faith of St. Peter."

Luther, who had set a rare example of moderation in keeping silence so long, boldly put forth theses in reply to those of Eck. The concluding one was thus expressed:—"It is by contemptible decretals of Roman Pontiffs, composed hardly four centuries ago, that it is attempted to prove the primacy of the Roman Church;—but arrayed against this claim are eleven centuries of credible history, the express declarations of Scripture, and the conclusion of the Council of Nice, the most venerable of all the councils."

Luther wrote letter after letter to Duke George, to ask permission of that prince, in whose states Leipsic was situated, to take part in the discussion; but he received no answer. The Duke was alarmed by Luther's proposition touching the Pope's authority, and would not consent to his request. The latter hereupon published some explanations of his thirteenth thesis. But this, so far from persuading Duke George, strengthened him in his resolution; he decidedly refused the Reformer his permission to take part in the discussion; allowing him only to be present as a spectator.

Bishop Adolphus of Mersburg, in whose diocese Leipsic was situate, tried to prevent the discussion taking place, and earnestly dissuaded Duke George from it, who answered with much good sense: "I am surprised to find a Bishop holding in abhorrence the ancient and laudable custom of our fathers, to enquire into doubtful questions in matters of faith. If your theologians object to defend their doctrines, the money given them would be better bestowed in maintaining old women and children, who at least might sew and sing."

The monks and priests at Leipsic from their pulpits besought the people to avoid the new heretics. They reviled Luther, depicting him and his friends in the darkest colours, to rouse the fanaticism of the lowest classes against the doctors of the Reformation.

Adolphus of Mersburg, as soon as he learned the approach of Luther and Carlstadt, caused to be fixed on the doors of the churches a notice prohibiting the discussion under pain of excommunication. Duke George directed the city council to tear down the Bishop's placard and committed to prison the daring meddler who had ventured to be the agent of his orders.

When Eck heard that Luther had arrived at Leipsic he repaired to the doctor's lodging:—"What is this?" said he, "I am told you object to dispute with me."

Luther.—"How can I dispute since the Duke forbids me."

Eck.—"If I am not allowed to dispute with you, I shall take

பாப்புவினுடைய கட்டளைச் சாதனங்களைக் கொண்டு றோமை திருச்சபையே சிரேஷ்டமென்று அத்தாட்சிபண்ணத் தேண்டித்தீர். ஆனாலும் வரப்பட்சமற்றஆக்கியோராலெழுதப்பட்டுப்பதினொருசதசமட்டுக்கும் சகலராலும் மேன்மைபெற்றோங்கி வளர்ந்த இதிகாசமும், துலாம்பரமாய்ப் பிரசித்தம்பண்ணப்பட்டவேதாகமமும், சகல ஆலோசனைச்சங்கத்திலும் சிரேஷ்டம்பெற்ற நைஸ் என்னுஞ் சங்கத்தாரின் தீர்மானமுமே சகல வாதுக்களையும் அறுக்கத்தக்கதலைமை பெற்றிருக்குதே அதற்கென்ன புத்தி" என்றார்.

லூதர் டியூக்சோட்சு என்பவருக்குக்காகிதத்தின்மேற் காகிதமெழுதி அவர் எல்லைமானங்களுக்குட்பட்டவிருக்கும் லீப்சீக் என்ற் ஊரில் நடக்கப்போகிற தருக்கத்திற்கொருவராய்வரும்படி அவரை இரந்துமன்றாடியும் யாதாமொரு பிரத்தியுத்தரமனுப்பாதிருக்க, லூதர் பாப்புவின் தத்துவத்தைத் தூஷணிக்கவும் அத்தைக் கண்டிக்கவும்பண்ணிய பிரபந்தங்களைப்பற்றியவரறியவந்தபொழுது திடுக்கிட்டுப் பயந்ததினுல் லூதர் கேட்ட கேள்வியைத் தட்டிபபோடவேதுவாயிற்று. ஆனபடியால் லூத்தர் தான் செய்த பதின்மூன்று பிரபந்தங்களுக்கும் விரித்துரையெழுதி அத்தைப் பகிரங்கம்பண்ணினர். டியூக்சோட்சு என்னுமிராசன் இப்பிரபந்த வியாக்கியானங்களைப் பற்றி அறிந்த போதைக்குந் தன்னைக் கொன்றலும் லூத்தர் கேள்விக்கிடங்கொடுக்கமாட்டேனென்று பாசையிட்டார். அப்படியிருந்தும் அவர் வாதிகளிலொருவராக ஏற்படப் பிரியமில்லாதிருந்தும் மறுபேரைப போலத் தானும் வாது பண்ணும் சமயத்தில் வருவேனென்று லூத்தருக்கு உத்தாமனுப்பினர்.

மேசுவேக் என்னும் நகரிக்கு விசுப்புவாயிருந்த எடோல்பஸ் என்பவரின் குருத்துவ எல்லைகளுக்குட்படலீப்சிக்கென்னும்நகரியிருந்ததினுலேஅவ்விடத்திலேற்கனகிசமித்தபடிஅவர்தருக்கம்பண்ணுமற்றடுக்கப் பிரயாசப்பட்டு டியூக்சோட்சு என்னுமரசனுந் தன்னெண்ணத்திற்கிசைந்துவரும்படி அவரை ஆவலித்த நெஞ்சுடன் வேண்டிக்கொண்டும் அவர் அதற்கிடங்கொடாமல் எடோல்பஸ் என்னும் விசோப்புக்கு அதிக நற்கருத்துடன் பகர்ந்தமறுமொழியாதெனில்—"விசுவாசத்தைப் பற்றிய காரியங்களேவைகளோ அவைகளைப் பற்றிச் சழச்சியமானவைகளை எடுத்து வாதாடிப் பேசி வரையறுக்கிறது எங்கள் நாதாக்கள் மூதாக்கள் வழக்கமாயிருக்க, விசோப்புவாயிருக்கிற நீர் பின்னைத் தருக்கம்பண்ணுதபடியிருக்கப்பாருமென்றென்னைக் கேட்கிறது என்ன நியாயம்? உம்முடைய வேத சாத்திரிகள் தங்கள் போதனைகளைப் பரிபாலிக்க வேண்டாமென்று மறித்தார்களானுல் அவர்களுக்கு வீணாய்க்கொடுக்குஞ் சம்பளப்பணத்தை எடுத்துப் புடைவைகளைத் தைக்கவும் சங்கீதம்பாடவுங் கூடிய ஆதரவற்ற வறிய கிழவிகளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் கொடுப்பததிக யோக்கியமென்றார்.

லீப்சீக்கென்னும் நகரியிலுள்ள ஏகாங்கிகளும் குருக்கள்மாரும் பிரசங்கக் கூட்டிலேறிப் புதிதாய்வந்த சமயபேதிகளுக்கு அனுசாரிகளாகாதபடிக்கெச்சரிக்கையாயிருங்களென்றுசனங்களுக்குப்புத்திசொல்லி அவர்களைத் திடப்படுத்தப் பார்த்தார்கள். மேலும், அவர்களோ லூத்தரையும் அவர் சினேகிதரையும் நிந்தாட்சணைபண்ணி அவர்களைப் படத்திற் சித்திரித்து எளிய சனங்கள் அவர்களை இகழும்படி கறுத்த வன்னம் பூசிவைத்து நகைத்தார்கள்.

லூத்தரும் காள்ஸ்டாற் என்பவரும் லீப்சிக் நகரியில் வந்து சேர்ந்துவிட்டார்களென்பதை எடோல்பஸ் என்பவர் கேள்விப்பட்டு அவ்விடம் நேரிடவிருக்கும் வாதுக்கு ஆர் போக்கு வரத்தாயிருக்கிறனே அவன் முற்றாய்த் திருச்சபையை விட்டகற்றப்படுவானென்று பிரசித்தபத்திரங்களை எழுதுவித்து அவைகளைக் கோவிற் கபாடங்களிலே சகலருமறிய ஒட்டிவித்தார். டியூக்சோட்சு அரசனிதை அறியவந்தபோது நகராதிபனை அழைப்பித்துச் சகலவிடங்களுக்கும் போய் அங்கங்கே கதவுகள் வழியே ஒட்டப்பட்டிருக்கும் பிரசித்தபத்திரங்களைப் பிடுங்கிக் கிழித்தெறியவும், ஆர் அதற்குத் தடைபண்ணுகிறனே அவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைப்பிக்கவுங் கட்டளைபண்ணி அனுப்பினர்.

லீப்சிக் என்னும் பட்டினத்தில் லூதர்வந்து சேர்ந்திருக்கிறரென்பதை டாக்குத்தர் எக் என்பவர் கேள்விப்பட்டபொழுது அவர் விடுதிக்குப்போய்—"நீரென்னுடன் வாதாடப் பிரியமற்றிருக்கிறீரென்று நான் உம்மைப பற்றிக் கேள்விப்படுகிறேன் இதென்ன மாதிரி" என்றார்.

லூதர்—டியூக் சோட்சு என்னுமரசன் வேண்டாமென்கும்போது நான் பின்னை எப்படித் துணிந்து பேசலாம்?

ஏக்—உம்முடன் வாதாடவெனக்கு இடங்கிடையாதுபோகில், பின்னைக் காள்ஸடாற் என்பவருடன் வா

தாடவேனக்கு எள்ளளவேனும் பிரியமில்லை. உம்முடைய நிமித்தமாக நானிங்கே வந்தேன்—என்றார். இப்படிச் சொல்லி இரண்டொரு நிமிஷத்திற்பிற்பாடு அவர் சொன்னதாவது—"நான் டியூக்இடத்தில் உத்தரங்கேட்டுப்பெற்றுக்கொண்ட துண்டானால் வாதகளத்திற்கு என்னுடன் வருவீரா? என்றார்.

லூதர்—லூதர் அக்களிப்புக்கொண்டுஉத்தரங் கேளும் நான் சந்தோஷமாய் வருவேன்—என்றார்.

உடனே எக் என்பவர் டியூக் என்பவரைக் காணும்படி போயிருந்து, அவரைக் கண்டு, நான் லூதரை வாதில் வென்று அவரை மடங்கடித்து, நிலைகுலைய ஏதுக்கொண்டிருக்கும் பாப்புவின் தத்துவத்தை நானே இஸ்திரப்படுத்தி அத்தை மகா மகிமையுள்ளதாக்குவேனென்றுமெத்தப் புகழ்ந்து பேசினதினால், டியூக்கென்பவருஞ் சம்மதித்து நீ போய் லூத்தருடன்வாதாடலாமென்றிடங்கொடுத்தார்.

எக்கென்பவருக்கும் காள்ஸ்டாற் என்பவருக்கும் நேரிட்ட வாது நாலு மூன்று நாளைக்கு நிலைத்திருந்தது—சம்பாவுலு சம்பேதுருவின் உச்சவத்தினங்களின் நாள் கிட்டியிருந்ததால் சம்பாஷணையை விட்டோய்வதற்கேதுவாயிற்று. உச்சவத்தினமுகிந்த பிற்பாடு, திரும்பவும் லூத்தருக்கும் எக்குக்கும் வாதம்நேரிட்டது. முதன்முதலிவர்கள் இருவரும் பாப்புவானவர் சகலர்க்குந் தலைவனே அல்லவோ என்பதைப் பற்றிப்பேசி அதன்பிறகு உத்தரிக்கிற தலத்தைப் பற்றிப்பேசினார்கள்.

வாதுபண்ணியிறுந்தத்தில்லூத்தருரைத்ததாவது—"ஆசாத்திற்கு நிமித்தமான டாக்குத்தர் எக் என்பவர்,சிலுவையைக் கண்டுபசாசுக்களோடுகிறபடியினாலே வேதாகமத்தைத் திக்காரம்பண்ணுகிறார். நானோவென்றால், நாதாக்கள் மூதாக்களுக்குச் செலுத்தவேண்டிய கனத்தையின்றி மற்றும்படி நான் தேவனருளுந் திருவாசகமேயுத்தமமென்றங்கீகாரம்பண்ணுகிறேன். இதைப் பற்றி மத்திட்சர் சொல்வதைக் கேட்பதேயெனக்கு மிகுந்த பிரியம்" என்றார்.

லூத்தருக்கும் எக் என்பவருக்கும் நேரிட்ட வாதம் முடிவுபெற்றது. அவர்கள் எடுத்துப்பேசின காரியத்தைப்பற்றி ஒன்றுந் தீர்மானம்பண்ணிக் கொள்ளவில்லை. ஒவ்வொருவருந்தான்தான் நினைத்தபடி விரித்துரையாய் அருத்தம்பண்ணினார்கள். ஆனாலும் இவ்வாதானது சற்றே நயங்கொண்டதாய் முடிந்தது. லூதர் பேசினபேச்சுக்களோ சகலர் மனதிலுஞ்சத்தியமாய்ப்பதிந்தது. எக்கென்பவருக்குஇரகசிய எழுத்துக்காரனும் அவருக் குயிர்த்துணைவனுஞ் சீஷனுமாயிருந்த போலியாண்டர் என்பவர் சமயானுசீர்த்தேற்றியாகிய லூத்தரின் பட்சத்தைச் சார்ந்துகொண்டார். ௲௫௱௨௰௨ ம் ஆண்டு முற்கூறில், போலியாண்டர் என்பவர் சகலருமறிய லீப்சிக் என்ற ஊரிற் சுவிசேஷத்தைப்பிரசங்கித்தார். ஏபிரேய பாஷைவியாக்கியான தேசிகராகிய சில்லீறியஸ் என்பவர் லூதர் பண்ணிய சீர்த்தேற்றத்துக்கு மகா பிராண சத்துருவாயிருந்தும் லூதர்பண்ணின பிரசங்கங்கள் அவருடைய மனதை நொருங்கடித்ததால், அதிகாழமாய் வேதாகமத்தைச்சோதித்துப்பார்க்கஆரம்பித்தார்.கொஞ்சநாட்சென்றபிறகு அவர் தானிருந்தவிடத்தைவிட்டு உவிற்றம்பாக் நகரிக்குவந்து லூத்தரின் பாதத்தின் கீழிருந்து படித்தார். அதன்பின், அவர் பிறங்குபோட் இடிறெஸ்டேன் என்னுமூர்களில் ஸ்தாபிக்கப்பட்ட, சபைகளுக்கு மேய்ப்பனாய் நியமிக்கப்பட்டார்.

அத்தாணிமண்டபத்திற் கொலுவிருந்து, டியூக் சோட்சு இராசனைப்புடைசூழ்ந்தவர்களுக்குள் பன்னிருபாயமுள்ள சோட்சு என்றநாமத்தைப்பொருந்தியஓர் இராசபிறபு இருந்தார். லூத்தர்பண்ணியபிரபந்தங்களும் அவர்வாதிற்காட்டிய நியாயங்களும் இப்பிள்ளையுடைய மனதிற் சிலையெழுத்துப்போலப்பதிந்ததினால் அவைவகளைப்பற்றி உற்றுத்தியானித்து லூத்தர் பாட்டுக்கு மெத்த வார்முற்றவரானார். சிறிதுநாட்சென்றபிற்பாடு இப்பிள்ளைக்கு விசோப்பென்னுஞ் சிரேஷ்டயுத்தியோகத்தைக்கொடுத்தும் அவரதைவேண்

very little interest in discussing with Carlstadt. It is on your account I am here." Then after a moment's silence, he continued, "If I obtain the Duke's permission, will you take the field?"

Luther. (overjoyed)—"only obtain permission, and we will meet."

Eck instantly waited on the Duke, and assured him that he was certain of victory, and that the Pope's authority, far from suffering by the dispute would come out if it the more glorious. George granted the desired permission.

The dispute was carried on for three or four days by Eck and Carlstadt, when it was interrupted by the festival of the Apostles St. Peter and St. Paul; after which it was again renewed by Eck and Luther. The subject of the dispute was the Pope's Primacy, after which they came to the subject of Purgatory.

Luther closed the discussion by these words;—"The Reverend Doctor Eck avoids the Holy Scriptures, as the devil flees from before the cross. For my part, saving the respect due to the fathers, I prefer the authority of the Word of God; and it is that which I would press upon our judges."

Thus ended the dispute between Eck and Luther.

No decision was made known on the matters discussed. Each one commented on them as he pleased.

The dispute was, however, not to end in smoke. The words of Luther had found their way, with irresistible power, to the minds of his hearers. Several who regularly attended in the hall of the Castle, were brought under the truth. Poliander, secretary to Eck and his intimate friend and disciple, was gained to the cause of the Reformation; and as early as the year 1522, he preached the Gospel publicly at Leipsic. John Cellarius, professor of Hebrew, one of the warmest opponents of the Reformation, struck by the words of the mighty Doctor, began to search the Scriptures more deeply. Shortly after, he gave up his place; and, full of humility, came to Wittemburg, to study at the feet of Luther. He was subsequently pastor at Frankfort and at Dresden.

Among those who sat on the benches reserved for the Court, and who surrounded Duke George, was George of Anhalt, a young prince of twelve years. The discussion at Leipsic awakened in this child serious reflections, and a decided partiality for Luther. Shortly after, he was offered a bishopric, and refused it. On the death of his pious mother, he found himself in the possession of all the Reformer's writings. Under strong conviction, and constrained to act upon it, he fearlessly ranged himself on the side of the Gospel. In vain his tutors, and foremost among them Duke George, beseeched him with entreaties, and remonstrances not to desert the cause of the Pope. He continued inflexible.

The disputation at Leipsic had yet nobler results. It was there, Melancthon, the theologian of the Reformation, received his call to the work. Hitherto he had applied himself only to literature. This conference communicated to him a new impulse, and from that hour, he bowed the heights of his learning before the Word of God. He received the Evangelical doctrine with the simplicity of a child. His auditors heard him explain the way of salvation with a grace and clearness which delighted every one. From this period Luther and Melancthon went forward together, contending for liberty and truth, the one with the energy of Paul, the other with the gentleness of John. Luther has well expressed the difference of their vocations:—"I," says he, "was born for struggling on the field of battle with parties and devils. Thus it is that my writings breathe war and tempest. I must root up stock and stem, clear away thorns and brambles, and fill up swamps and sloughs. I am like the sturdy wood-cutter, who must clear and level the road. But our Master of Arts, Phillip, goes forward quietly and gently, cultivating and planting, sowing and watering joyfully, according as God has dealt to him so liberally of his gifts."

But the mightiest result of the discusston was wrought in Luther himself. Searching into the annals of the Church, he discovered that the supremacy of Rome had its origin in the ambition of one party and the credulous ignorance of another. Luther has marked this as the epoch of his enfranchisement from the Papal yoke.

"Learn of me," says he, "how hard it is to unlearn the errors which the whole world confirms by its example, and which, by long use, have become to us as a second nature. I had for seven years read and publicly expounded the Scriptures with much zeal, so that I knew them almost all by heart. I had also all the first fruits of the knowledge of faith of my Lord Jesus Christ; that is, I knew that we are justified and saved, not by our works, but by faith in Christ; and I even openly maintained that it is not by divine right that the Pope is the Chief of the Christian Church. And yet I could not see the conclusion from all this, namely, that of necessity and beyond doubt, the Pope is of the devil. For what is not of God must needs be of the devil.

டாமென்றுவிட்டார். அவருக்கிருந்த தெய்வபத்தியுள்ளமாதாக்காலஞ்சென்றபோது லூத்தரெழுதியசகலபிரபந்தங்களுந் தன்னிடத்திலிருக்கக்கண்டார். பாப்புமதமுற்றுந்தப்பென்று அவர்மனச் சாட்சி தீர்த்தபடியால் அதின்படி செய்யவேண்டுவது தன் கடைமையென்றெண்ணி அஞ்சா நெஞ்சத்துடன் சுவிசேஷபட்சமானார். அதையவருவாத்தியாயரும், பிரதானமாய் டியூக் சோட்சு இராசனுமறிந்து பாப்புவை விட்டு மறளவிழாதபடிக்குக்கூடியளவு தெண்டித்துமன்றடி வேண்டிய நியாயங்களை எடுத்துக்காட்டியும் அவரோ சற்றுமசையாதவராயிருந்தார்.

மேலும் லீப்சிக் இலேநடந்த வாதினாலாயபயன்கள் மகாமேன்மையுள்ளவைகளாயிருந்தன. சமயானுசீர்த்தேற்றத்தின் வேதாசிரியனாகிய மேலாங்கதன் என்பவருஞ் சுவிசேஷ உத்தியோகத்திற்கழைக்கப்பட்ட இடமிதுவே. இவரிதுவரைக்கும் வேதாசிரியனாயிருப்பதிலும் நூலாசிரியனாயிருப்பதுத்தமமென்றெண்ணிவந்தும் லூத்தர்பண்ணினவாதத்தை அவர்கேட்டதினால் அவர்மிகுதியுமுச்சாகங்கொண்டு அதுமுதற்றெடுத்து அவர்தான்கற்ற கலைக்ஞானத்தாற்கொண்ட அகங்காரத்தைக் கடவுள் திருவாய்மலர்ந்தருளிய வார்த்தைகளுக்குக்கீழ்ப்படுத்திச்சுவிசேஷபோதனையை ஓர் மாசற்றபிள்ளையடைவாயேற்றுக்கொண்டார். அவர்மகாஒய்யாரமாயுந் துலாம்பரமாயும் இரட்சணியவழியைப் பற்றிப்பண்ணினபிரசங்கத்தைக் கேட்டவர்களெல்லாரும் மகாசந்தோஷப்பட்டார்கள். இந்தக்காலந்தொடுத்து லூத்தரும் மேலாங்கதன் என்பவரும் ஒருமிக்கக்கூடிக்கொண்டு இட்டஞ் சத்தியமென்பவைகளைப்பற்றி—ஒருவர் பவுல்காட்டிய உற்சாகயூக்கத்துடனும்—மற்றவர் யோவான்காட்டிய மெத்தனவுடனும்பிரசங்கம்பண்ணிக்கொண்டுதிரிந்தார்கள். லூத்தர் தன்னுடையவுந் தன்சிநேகிதனுடையவும் உத்தியோகத்திற்குள்ள வேற்றுமையாதென்பதைப்பற்றிஅவர்சொல்வதென்னவெனில், "கட்சியாரோடும் பசாசுக்களோடும் நான்முனைமுகத்திலே யுத்தம்பண்ணுவதற்காகச் சென்மித்தேன். அவ்விதமாய் நானெழுதியபிரபந்தங்களனைத்தும் யுத்தங்கலகமென்பவைகளையே சுவாசமாகவிடுகின்றன, நான்வேரோடேபிடுங்கி முள்ளையும் முட்செடிகளையும்வெட்டிச் சவர்த்தரை நிலங்களை நிரப்பவேண்டும். நானோ காடுகளைவெட்டித் தெருக்களைச் செப்பனிடுந் துணிவுகாம்பொருந்திய காடுவெட்டிக்குச்சமானமாயிருக்கிறேன். ஆனாலுங் கலைஞானபோதகனும் வேதாசிரியனுமாகிய பிலிப்பு என்பவரோ அதிகமமைதியுடன் சென்று கடவுள் அவருக்கீந்த பிரகாரம் தரையைச்செய்கைபண்ணிப் பயிர்களை நட்டு விரையைவிரைத்துச்சந்தோஷமாய்த்தண்ணீரைப்பாய்ச்சிவருகிறார்" என்றார்.

வாதினாலாயபயன் லூத்தரிலேயே அதிகம் அழமாய்ப்பட்டது. திருச்சபையிலெழுதிவைத்த புராதனயெழுத்துக்களையெடுத்து அவராராய்ந்துவருகையில், றேமைச்சபை சகலசபையிலும் மகாசிரேஷ்டமென ஒன்றுமறியாத ஏதைகளும் பேதைகளுமான சனங்கள் தங்கள்பெருமையினாலப்படிக்கட்டி வைத்துக்கொண்டதேயல்லாமல் மற்றும்படி அதற்கு யாதொரு பெறுமானமுகாந்திரங்களில்லையென அத்தாட்சியுடனறியவந்தார். பாப்புவினுகத்தடி என்னுஞ்சிறையிலிருந்து இட்டம்போகத் தொடங்கினகாலமிதுவென்று லூத்தர் குறித்துவைத்துக்கொண்டிருந்தார்.

மேலும் அவர் சொல்வதென்னவெனில்—"என்னிடங்கற்றுக்கொள்ளுங்கள் முழு உலகத்தாருந் தங்கள் முன்மாதிரியினாற்றிறப்படுத்திவருவதும், வெகுகாலப்பிரயோகத்தால் உபயோகவியற்கையென்று பெயர்ப்பட்டதுமான தப்பிதங்களை அறியாமலிருப்பது எவ்வளவுவருத்தம்! நானோவேதவசனத்தடங்கிய ஒவ்வொரு வசனங்களையும் வாய்ப்பாடமாக்கிக்கொள்ளத்தக்க அவ்வளவாக மகா உற்சாகத்துடனே ஏழுவருஷக்காலமாக நானத்தைவாசித்துச்சகலருக்கும்வெளியாங்கமாகவிரித்துரையாய்ப் பேசினேன். மேலும், எனது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசுவாசத்தாலுண்டான அறிவின் முதற்கனியைப் போசித்தேன். அதாவது, மனிதன் தன்னுடைய கீர்த்தியங்களினாலல்ல, கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தினாலேயே நீதிமான்களாகி இரட்சிக்கப்படுவானென்று திட்டமாய் அறிந்துகொண்டேன். மேலும், பாப்புவானவர் சகல கிறீஸ்த சபைக்குஞ் சிரேஷ்டம்பெற்றவரென்று நியாயமின்றி வீணாய்க் கட்டிக்கொண்ட கட்டேயல்லாமல், மற்றும்படி தேவனால் அவருத்தாம் பெற்றவால்லவென்று நான் திட்டமாய்ச்சாதித்துவருகிறேன். ஆகையால், பாப்புவானவர் சந்தேகவிபரீதமின்றிப் பசாசுடையவரென்று நாங்கள்தீர்க்கிறதற்குத் தீர்க்கமான நியாயமுண்டு. ஏனென்றால், கடவுளால் உண்டாகாத அனைத்தும் சந்தேகமின்றிப் பசாசினால் உண்டாகவேண்டியது.

நாற்சமயக்கோளரி.

௧ம். காண்டம்.

இந்து சமயங்களைக் குறித்துச் சொல்லியது.

நெஞ்சறி விளக்கம்.

அரியதோர் நரசென்மந்தான் அவனியிற்பிறந்து பின்னால்
பெரியபேரின்பஞானம்பெறுவதேயரிதென்றெண்ணி
உரியவேதாந்தவுண்மை யுரைக்குமாசானைப்போற்றித்
தெரியொண்ணாநாகநாதன்சீர்பாதந்தேடுநெஞ்சே.

இனிச் சொல்லப் போகிறவைகளெல்லாவற்றையும் புத்திமான்கள் தனித்தனியே நன்றாய் ஒரேயிடத்திலே வேறு சிந்தனையில்லாமலிருந்துகொண்டு ஒருதரத்திற்கு நான்குதரமபோல ஆராய்ந்தாராய்ந்து பார்த்துக்கிரகிக்கிறவர்களுக்கு அச்சரீர இலட்சணங்களும் ஆத்துமலட்சணங்களும் இன்னம் மற்றவைகளெல்லாங் காணப்படும். அப்படிக் கண்டபேர்களுக்கு நன்றாய் வெளியாகாமல் ஒருவிதம் போலவேயிருக்கும். அதெப்படியிருந்தாலும் அதையும் விட்டுவிடாமல் ஒரே நிலையுறுதியாயுஞ் சிந்தனையாயும் பக்திவிசுவாசமாயுஞ் சிநேகத்தில்மாளாதவர்களாயுமிருந்தவர்களுக்கு, மேற்சொன்னவைகளின்பேரிலேகருத்த தையுடையவர்களாயிருக்கிறபேர்களுக்குத் தங்களாத்துமாவின் மகிமையையும் மோட்ச பாக்கிய சலாக்கியத்தையும் நித்தியானந்தத்திலிருந்து சுகித்து வாழுகிற வாழ்வையுமடைகிறதுமல்லாமல் நித்திய நரக பயங்கரத்தையுங்கண்டு அதை ஒருபொருட்டாயெண்ணாமலும் அவ்வாண்டவரின் பேரிலே எந்நேரமுங் கெதியுந் தியானமும் மனமகிழ்ச்சியும்அக்களிப்புமுடையவர்களாயுமிருப்பார்களென்று பிரத்தியட்சமாய் விளங்குகிறதாயிருக்க அவர்கள் மெய்யான சிருஷ்டி கர்த்தாவாகிய தெய்வமாரென்று நற்சீரடைந்து குணப்படாமலுஞ் சன்மார்க்கத்தையடையாமலும்பற்பல மார்க்கங்களும் வழிகளுமுண்டாயிருக்கிறவைகளையுஞ் சராசர வஸ்துக்களையும் ஆகாயம் பூதலத்திலுண்டானவைகளையும் அரசாண்ட இராசாக்கள் வேடர்கள் முதலான வீரர்களெல்லாரையும் இந்துக்களாராதித்துக்கொண்டுவருகிறது அசத்தியமானபடியினாலே அதுகள் அழிவுக்குரியதாயிருக்கிற தவறுதலைக்குறித்தும் உங்கள் முன்னோர்களுரைத்த கிரந்தப்பாஷையில் கேதாவென்பவன் நாலுசாமத்துக்கொவ்வொரு சுலோபத்தை விபரித்துப் பறைமுறை போட்டவைகளையும் இன்னுஞ்சில பாடல்களையுஞ் சாட்சியாக ரூபித்துச்சொல்லிய—

கேதா கிரந்த சுலோபம்.

மாதாநாஸ்தி பிதாநாஸ்தி
நாஸ்திபந்து சகோதரகா
அர்த்தம்நாஸ்தி கிரகம்நாஸ்தி
தஸ்மாசாக்கிருதா சாக்கிருதா

வெண்பா.

தந்தைதாய்சுற்றத்தாற்சகோதரரும்
விந்துநிலையறியாதவீணரே—விந்து
வெறும்பாளத்தாக்கிவெறுவினையைநோக்கி
உறங்கிஉறங்காதிரு.

நெஞ்சறிவிளக்கம்.

தந்தைதாய்நிசமுமல்லச் சனங்களும்நிசமுமல்ல
மைந்தரும்நிசமுமல்ல மனையவள்நிசமுமல்ல
இந்தமெய்நிசமுமல்ல இல்லறம்நிசமுமல்ல
சுந்தரநாகநாதன் துணையடிநிசம்பார்நெஞ்சே.
காண்பதுமழிந்துபோகும் காயமுமழிந்துபோகும்
ஊண்பொருளழிந்துபோகும் உலகமுமழிந்துபோகும்
பூண்பணிநாகநாதன் பொற்பதமழியாதென்றும்
வீண்பொழுததுபோக்காமல் வெளிதனிலொளிபார்நெஞ்சே.

என்று கேதாமுதலான சுலோபத்திற்பிதா, மாதா, சகோதரர்கள், திரேகங்கள், பொருட்கள், இல்லறங்கள், கிரகங்களாகிய வீடும், உலகமும், அப்படியே வானம் ஒருவீடாயும், அல்லது கூடாரமுமாய் இருக்கிறதினாலே அதிலுள்ள யாவும், இந்தச் சூரிய சந்திர நட்சத்திரம் முதலானவைகளுங் காணப்படுகிறதென்று திருகிறதாயிருக்க, அவைகளெல்லாம் நாஸ்தியாயழிந்துபோவதுநிச்சயமாயிருக்கின்றது மனதே. நீங்களவைகளைக்குறித்துக்கவலைப்பட்டுச் சாக்கிரதையாயிருக்கவேண்டியது அவசரமென்றுரைத்திருந்தும் ஐயோ! இந்துமார்க்கச்சபையார்களே! இவ்வுலகங்களிற் பழையவைகளெல்லாம் மாறிப் புதியவைகளாயிருப்பதைக்கண்டும் அவ்வழியாத பராபரவஸ்துவை மாத்திரம் மனிதசாதிகள் அருச்சனை பண்ணவேண்டுமென்றிருக்க அச்சீவாத்துமாக்கள் அழியாமல் நித்தியமுள்ளவைகளாயிருக்கின்றபடியினால் அந்நித்தியமுள்ள ஆத்துமாவை அவர் சிருஷ்டித்து அவர்களுக்கு மோக்ஷபாக்கியத்தைக் கொடுக்கச் சர்வ வல்லமையுள்ளவரும், மாறிப்போகாத நித்தியமுள்ளவருமாய் இருந்தும் அவரைச்சதாகாலங்களிலும் இடைவிடாமற் துதிக்கிறதே காட்சிப் பிரமாணமாயிருக்கின்றது. நீதியுஞ்சத்தியமுள்ளவரைத் தள்ளிவிட்டு அழிந்து ஒழிந்து போகிற தேவர்களைக் கும்பிடுகிறதினால் மோட்ச கதியை அடைகிறதற்கு வழி ஏதாகிலும் உண்டா? சொல்லுங்கள். அப்படிச் சொல்லலாமென்றால் அவைகளெல்லாந் தெய்வதுரோகமென்றுணர்ந்தும், உணராமலும், அதனை வகைஅறுக்காமலும் பற்பல மாறுபாடுகள் உள்ளவர்களாயும் இருக்கிறது நியாயமா? அது நியாயமாய்க் காணாமற் போனபோதைக்குஞ் சில ஞானிகள் சொல்லுகிறதின்படியே —

அண்ணலாம்பரமசோதி யற்புதமறியாதாலே
கண்ணிலேகண்டதெல்லாங் கதிதருங்கடவுளென்று
மண்ணுளோர்வணங்கிறுர்கள் வரன்முறைப்படியீதென்ன
எண்ணியேநடந்துமோக்ஷ மிழந்தெரிநாகில்வீழ்வார்.

என்றுமனிதர்கள் தங்களுக்குத்தாங்களே வீணாய்வருவித்துக்கொண்டு சிருஷ்டிக்கர்த்தாவாகிய திரியேகபராபர வஸ்துவையும் புறம்பாகத்தள்ளிப்போட்டு அவராலுண்டாக்கின சிருஷ்டிப்பைத்தெரிந்தெடுத்துக்கொண்டபடியினாலே இந்துசதுர்வேதசித்தாந்த அந்தணச்சமயத்தார் ஆகாயத்தை ஆகாசபாணியென்றும் சூரியனை சூரியநாராயண பகவானென்றுஞ் சந்திரனைச் சந்திரபகவதியென்றும், நெருப்பை அக்கினிதேவனென்றும் மேகத்தைமேகவிராசனென்றும், மழையை வருணபகவானென்றும் வானவில்லை அருச்சுனனுடையவில்லென்றுஞ், சலத்தைக் கெங்காதேவியென்றுங் காற்றை வாயுபகவானென்றும், பூமியைப் பூமதேவியென்றும், மாட்டை இஷ-மென்றும், பசுவைக் காலையீனுகிறபடியினாலே பசுவருதியென்றும் விளக்கைத் திருவிளக்கு நாச்சியாரென்றுஞ் சாதத்தை அன்னபூரணியென்றும் ஆயுதத்தை ஆயுதபாணியென்றும் நாயை வயிரவசுவாமியென்றும் செம்பிராந்தைக்கிஷட்ணசுவாமியென்றும் குரங்கை அனுமந்ததேவனென்றும் நாகத்தை நாகதேவனென்றும் மிருகம் பெருச்சாளி அன்னப்பட்சி மயில் பூனை குரங்குமுதலானவைகளையெல்லாம் வாகனங்களென்றும் மச்சங்களை மச்சராசாவென்றும் சமுத்திரத்தைச் சமுத்திரராசனென்றும் ஆதாம் ஏவாள் என்ற அந்த ஆதிமனிதர்கள் நம்முடைய ஆதிதகப்பனுந் தாயுமாயிருக்க இந்துமார்க்கத்தார் அவ்விருவர்கள் பேரைமாற்றி வைத்துங்கொண்டு * சிவனையுஞ் சத்தியையுந் தெய்வமாகவும், அவ்ஆதி தகப்பன் தாயாகவுஞ் சொல்லி வணங்கி வருதலுந்தவிரப்பணத்தையுந் தெய்வமென்று கண்ணிலே ஒத்திக்கொள்ளுகிறதும், இன்னம் அனந்த வஸ்துக்களின்ரூபுந், திரிமூர்த்திகளின்ரூபும், அவரவர்கள் பெண்சாதிகளின்ரூபுந், துஷடதேவதைகளின்ரூபும், வணங்கிவந்ததும் போதாமல், பஞ்சலோகம், பொன், வெள்ளி, கல், மண், மரம், படம், பீங்கான், இவைமுதலான சீவனற்ற உருபுகளையுங் கும்பிட்டு ஆராதித்து வந்திருந்தும், உறுதிப்படாமல், அவரவர்கள் இஷடத்தின்படியே தங்கள் தங்கள் பெண்சாதியை வைத்துத் தாங்கப்பெலனில்லாமல் மதிமயங்கி ஒருவன் பெண்சாதியை மற்றொருவன் எடுத்துக் கொள்ளுகிறதும், அதற்காக இராட்சதர், வீரர், அல்லது வேடர்களைப்போலவே சண்டைச்சரவுபண்ணுகிறதும், பிரமகத்திதோஷம் போகத்தண்ணீரில் ஸநானம்பண்ணுகிறதுஞ் சிவனுடையம்காசத்துக்குஒப்பாய் லிங்கத்தைப்போலக் கல்லினாற் பண்ணிக் கும்பிடுகிறதும், அவன் பெண்சாதியின் உபஸ்தமாகிய ஆவிடையாளைப் போலக் கல்லினாற் பண்ணிக் கும்பிடுகிறதைக் குறித்து பின்னால் சொல்வதுமன்றி, இந்துமார்க்கச் சதுர்வேத சித்தாந்த சபையார்களுடைய அஞ்ஞானத்தின் கேடுகளை எடுத்துக் காண்பிக்கும். அருணோதயம், ௧ம். புத்தகம், ௰௯ம் நம்பர். ௱௬ம ௨௪ம். நம்பர், ௱௮௯ம ஏடுகளிலுங் கிறிஸ்து வேதத்தைப் பற்றித் தூஷித்தவர்களுக்கு வதிலப் பாடிய இரட்டை ஆசிரிய விருத்தங்களையுங் கவனிக்கிறத்தோடே கூட.

* உருத்திரக் காண்டத்தில் விருத்தம்.
சிவன்சத்திதன்னையீன்றுஞ் சத்திதான்சிவனையீன்றும்
உவந்திருவரும்புணர்ந்து உலகுயிரெல்லாமீன்றும்
பவன்பிரமச்சாரியாவான் பார்பதிகன்னியாவாள்
தவந்தெரிஞானத்தோர்க்குத் தன்மையாய்த்தெரியுமன்றே.

உலகஞானிக்கவிப்பா.

பாடத்தாலென்ன பலன், பாவினையாலென்ன பலன்
வேடத்தாலென்ன பலன், வெம்பூச்சாலென்ன பலன்
மூடத்தாற்கண்விழியா, முழுக்குருட்டைத்தெய்வமென்று
ஓடக்கோவில்லாமலுருக்கவலைப்பட்டேனே.

நெஞ்சறிவிளக்கம்

மித்திரக்குருக்கள் சொல்லை, மெய்யெனக்கல்லை வைத்துப்
பத்திரபுஷப்பஞ்சாற்றிப் பணிந்திடும்பாவிநீதான்
சித்திரப்பதுமை போலேசெய்தொழிலொடுங்கின்று
புத்தியால்நாகநாதன் பொன்னடிபோற்றுநெஞ்சே.

நாலடியார்.

Impurity of the Body.—தூய்தன்மை.

௩. தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடிப்
போய்க்கோலஞ்செய்யவொழியுமேயெக்காலு
முண்டிவினையுளுறைக்குமென்பெரியோர்
கண்டுகைவிட்டமயல்.

பதம்	உரை
பெரியோர்	பெரியோர்கள்
எக்காலும்	எந்தக்காலமும்
உண்டி	போசனம்
வினையுள்	போசிக்குந்தொழிலினால்
உறைக்கும்	துர்க்கந்தம்வீசும்
என	என்று
கண்டு	அறிந்து
கைவிட்ட	கைவிட்டுவிட்ட
மயல்	மயக்கமான(சரீரநாற்றம்)
தக்கோலம்	பஞ்சவாசம்பொருந்திய தாம்பூலம்
தின்று	தின்று
தலை	சிரசு
நிறைய	நிரம்ப
பூச்சூடி	பூவைத்தரித்து
போய்	பொய்யான
கோலம்	அழகை
செய்ய	செய்ய
ஒழியுமே	நீங்குமே எ—று.

---

௪. தெண்ணீர்க்குவளைபொருகயல்வேலென்று
கண்ணிலபுன்மாக்கள்கவற்றவிடுவனே
வுண்ணீர்களைந்தக்கானுங்குசூன்றிட்டன்ன
கண்ணீர்மைகண்டொழுகுவேன்.

பதம்	உரை
தெள்	தெளிந்த
நீர்	நீரிலிருக்கும்
குவளை	குவளைமலரையும்
கயல்	சேற்கெண்டையையும்
வேல்	வேலாயுதத்தையும்
பொருவென்று	ஒப்பாகியகண்களையுடையவளென்று
கண்ணில்	ஞானக்கண்ணில்லாத
புன்மாக்கள்	இழிவானமனிதர்கள்
கவற்ற	என்மனதைவருத்த
விடுவனே	நானறவத்தைவிடுவனே
உள்	உள்ளிருக்கும்
நீரை	நீரை
களைந்தக்கால்	எடுத்தகாலத்து
நுங்கு	நுங்கை
சூன்றிட்டன்ன	தோண்டியகுடுக்கைக்கொப்பான
கண்	கண்ணினுடைய
நீர்மை	தன்மையை
கண்டு	பார்த்து
ஒழுகுவேன்	நல்வழியிலேநடப்பேன் எ—று

MORNING STAR.

Jaffna, 22d October, 1846.

THE CROSS OF CHRIST.

"The whole history of our world has looked forward or backward to the fatal tree reared on Golgotha. The oblation there made had the promise and immutable purpose of God with it to insure its efficacy over the whole range of man's history antecedent and subsequent, and along the whole course of the mystery of Divine Providence, as seen in the government of the world.

"Let us, we entreat you, be understood. By the cross of Christ we do not mean the imaged cross, as borne on the banners of the Inquisition, with the emblems of judgment and mercy floating over the scenes of the Auto da Fe, where the judgment was without justice, and the mercy was a mere lie. Nor the cross as borne on the shoulder of the crusader, whilst, pleading the name of Christ, he moved through scenes of rapine and massacre to lay his bloody hand on the holy sepulchre. Nor do we mean the cross, as, carved and gilded, it is seen glittering on the spires of a cathedral, or hung in jewels and gold around the maiden's neck, or embroidered on the slipper of a pontiff. The cross, as we understand it, has no sympathy with a religion of shows and spectacles, of mummeries and pageants, of incense and music, and long-drawn aisles, and painted windows and gorgeous pictures, and precious statuary.

"But by this title, we mean the cross naked, rugged, and desolate; not pictured, save on the eye of faith, and upon the pages of Scripture—not graven but by the finger of the Spirit on the regenerate heart; the cross as Paul preached it, and the first Christians received it. The doctrine we suppose to have two aspects. The first, Christ crucified, as becoming our free and full *justification* by a blood that cleanses from all sin, and avails for the world. It was the reassertion of this doctrine which wrought the glorious Reformation. The second, Christ crucified, as the principle of our *sanctification*, under the influences of the renewing Spirit, who conforms the believer to his Lord, and crucifies his evil nature within him. Thus it was that Christ was not only crucified himself, but required also every disciple to come after him, taking up also his own cross; and Paul speaks of himself as crucified unto the world. This last aspect of the doctrine of the cross, we have thought, has been rather overlooked by some of the Reformers in their zeal against self-righteousness, and against a false and ascetic piety. Such was Cecil's opinion, whom none can suspect of any want of a reverent feeling for the Reformers. But if we look to the New Testament, it is very evident that both were blended in the doctrine as the early Christians received it. The cross was not only their confidence, but the model of their conformity. It is, we have supposed, a defect here—a neglect of aiming at this high standard of devotedness, on the part of many of us Protestants, that has given to the Oxford Tractarian movement, and to the present efforts of Romanism, most of their hold upon the public mind. Apparent estrangement from the world, and a self-denial that rises superior to the ordinary idols of society, will commend to the respect of mankind even much error in those thus estranged and self-denying. It throws a glistering veil of sanctity even over the gross corruptions of Romanism; and her impostures and enormities are often overlooked by those who see standing in her shrines her martyrs of charity, her Vincent de Pauls, and her Francis Xaviers. A pining recluse, scourging himself in sober sadness, as the expression of his deep sense of sin, may be a pitiable spectacle of delusion; but he is not, in the eyes of the world generally, as odious a sight as that presented by a self-satisfied, self-indulgent professor of a purer creed, living in all ease and pleasure, conformed to the world in all its follies, and vaunting of a doctrinal orthodoxy that produces no eminence in holiness. Christians must live more upon the cross, seeing in it not only the principle of their faith, but also the pattern of their obedience—the cross not only as cancelling their sin, but also as crucifying their lusts. Such is the two-fold aspect of the great truth, the basis of all scriptural doctrine and practice, the centre of all its mysteries and all its morality—the cross of Christ."

CAPITAL PUNISHMENT.

